# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093804

1. District மாவட்டம் : KARUR
PS: காவல்நிலையம் VAC
Year: ஆண்டு 2019
FIR No.: மு.த.அ. எண் 04/19
Date: நாள் 01.08.19

2. (i) Act சட்டம்: CRPC AND PREVENTION OF
(ii) Act சட்டம்: CORRUPTION (AMENDMENT)
(iii) Act சட்டம்: ACT - 2018
Sections பிரிவுகள்: 102 CRPC AND 7(A)
Sections பிரிவுகள்: OF PREVENTION OF
Sections பிரிவுகள்: CORRUPTION (AMENDMENT) ACT - 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 31.07.19
Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 16.35
Time to : நேரம் வரை 19.00 Hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.08.19
Time : நேரம் 14.00 HRS
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக COMPUTER TYPED

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் SUB REGISTER OFFICE THARAGAMPATTY 40.Km. SOUTH
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. VELUMANI
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் PONNIAH
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 10.05.1967
(d) Nationality : நாட்டினம் INDIAN
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் SENIOR REVENU INSPECTOR INSPECTION CELL OFFICER KARUR.
(g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. MAHAMUNI, S/O SANKAR, KALUTHARIKKAPATTY, MAVATHUR.(PO) KADAVUR .(T.K) KARUR .(DIST)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GOT ORDER FROM DVAC

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக குற்ற எண்: 04/19 U/S 102 CRPC AND 7(A) OF PREVENTION OF CORRUPTION (AMENDMENT) ACT - 2018. தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் -.............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

1.8.19 | 01.8.19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
INSPECTOR OF POLICE
V&AC
KARUR

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..............................
Rank: நிலை ......................No. எண் ..........

**Continuation of Karur Vigilance and Anti-Corruption FIR in Cr.No. 04/2019, U/s. 102 Cr.P.C and 7 (A) of Prevention of Corruption Act (Amendment) 2018.**

பணிந்தனுப்பபடுகிறது.

கரூர் மாவட்டம், தரகம்பட்டி பகுதியில் கடவூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள தரகம்பட்டி சார்பதிவகத்தில், பதிவு உள்ளிட்ட ஏனைய அரசு அலுவல்கள் செய்து கொடுக்க மேற்படி சார்பதிவக பணியாளர்கள் நேரடியாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாகவும் கையூட்டு கேட்டு பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில் 31.07.2019 ஆம் தேதி மாலை சுமார் 16.35 மணிக்கு நானும், திருமதி செந்தாமரைசெல்வி, கிராம நிர்வாக அலுவலர், இனாம் கரூர், கரூர் மாவட்டம் மற்றும் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கரூர் மற்றும் காவல் குழுவினருடன் இணைந்து சார்பதிவாளர் அலுவலகத்தை சோதனை மேற்கொண்டோம். இச்சோதனையின் போது சார்பதிவக அலுவலக முன்பக்க பிரதான கதவு வழியே உள்ளே நுழைந்தும், மேற்படி சார்பதிவகத்தைச் சுற்றி நான்கு திசைகளிலும் காவலர்களை பாதுகாப்பிற்காக நிறுத்தப்பட்டது. சார்பதிவகத்தின் உள்ளே நுழைந்ததும் கிழக்கு மேற்காக போர்டிக்கோவும், அதன் உள்ளே நுழைந்ததும் பெரிய அலுவல் ஹாலும், அதனை அடுத்து ஸ்கேன் செய்யக்கூடிய ஹாலும், அதனை அடுத்து கழிவறையும், ஸ்கேன் ஹாலுக்கு உள்ளே கணிணி அறையும் உள்ளது. அதில் ஒரு பெண் மற்றும் ஒரு ஆண் இருந்தார்கள். அலுவல் ஹாலை மேற்கு பார்த்தவாறு இரண்டு அறைகள் உள்ளது. முதலாவது அறை அலுவல ஜெனரேட்டர் பயன்பாட்டிற்கு உள்ளது. அதனை அடுத்து உள்ள அறை ஆவண பதிவறை ஆகும். அலுவல் ஹாலின் கிழக்கு பார்த்து மேற்கு ஓரத்தில் சார்பதிவாளர் இருக்கை உள்ளது. அதில் தெற்கு புறமாக உள்ள இருக்கையில் ஒரு பெண் ஊழியர் அமர்ந்திருந்தார். அவர் பத்திரபதிவு செய்ய வரும் நபர்களின் புகைப்படம் எடுப்பவராகவும், ஆவணங்களில் கம்ப்யூட்டரில் கைரேகை பதிபவராகவும் பணி செய்து கொண்டிருந்தார். வடக்கு பகுதியில் தெற்கு பார்த்து மேஜை போட்டு அலுவலக உதவியாளர் இருக்கையில் ஒருவர் அமர்ந்திருந்தார். அவரது பெயர் குறித்து கேட்க அவர் தனது பெயர் பரமசிவம், த/பெ. பெருமாள் என்றும் தெரிவித்தார். தான் ஆவணங்களுக்கு சீல் வைக்கும் வேலைகள் செய்வதாக கூறினார். மேற்படி அலுவலக உதவியாளர் இருக்கைக்கு இடதுபுறம் இளநிலை உதவியாளர் இருக்கை உள்ளது. அவர் பத்திர பதிவின் போது பத்திரங்களில் அரசு முத்திரை ஒட்டு வில்லை பதிவு

செய்யும் வேலை செய்து கொண்டிருந்தார். அவரது பெயர் குறித்து கேட்க தனது பெயர் சண்முகம், த/பெ. பொன்னுச்சாமி என்றும் தெரிவித்தார். அலுவலகத்தின் உள்ளே சுமார் 5 க்கும் மேற்பட்ட நபர்கள் ஆங்காங்கே நின்றுகொண்டிருந்தார்கள். அலுவலகத்தின் அனைத்து அறைகளுக்கும் காவலர்களை அனுப்பி பாதுகாப்பிற்காக நிற்கச் செய்யப்பட்டது. சார்பதிவாளர் மற்றும் அங்கு பணியாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் வந்திருக்கும் அலுவல் சாட்சிகள் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினரையும் திடீர் சோதனை செய்ய வந்த விபரத்தையும் கூறி சோதனை தொடங்கப்பட்டது. சார்பதிவாளர் பெயரை கேட்க அவர் தன் பெயர் திருமதி கண்ணகி, சார்பதிவாளர் என்றும், கரூர் மாவட்டம், தரகம்பட்டி சார்பதிவாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரின் இருக்கைக்கு எதிரே சுமார் நான்கைந்து பேர் நின்று அவரிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். அலுவலக கணிபொறி அறையிலும் இருந்த இரண்டு நபர்களையும் அவர்கள் இருந்ததற்கான காரணம் குறித்து கேட்க ஒருவர் தனது பெயர் செல்வி சித்ரா, த/பெ.குழந்தைவேல் என்றும், தான் கணிணி விபர பதிவாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். மற்றொருவர் தனது பெயர் சுரேந்தர், த/பெ. ராஜமாணிக்கம் என்றும், தான் கேமிரா ஆப்ரேட்டராக பணிபுரிவதாக தெரிவித்தார். மேலும் ஸ்கேன் செய்யகூடிய ஹாலில் பணிபுரிந்த பெண்ணிடம் அவரது விபரம் குறித்து கேட்க, அவரது பெயர் திருமதி கலைவாணி, க/பெ.முருகானந்தம் என்றும், தான் ஆவணங்களை ஸ்கேன் செய்யக்கூடிய பணி செய்வதாகவும் தெரிவித்தார். அலுவலகம் முழுவதும் மின் வசதி செய்யப்பட்டிருந்தது. மேலே கூறப்பட்ட சார்பதிவாளர் ஹாலில் நின்றிருந்தவர்களை விசாரித்து, அவர்களில் பதிவுக்கு வந்திருந்த பொதுமக்களை மட்டும் விசாரித்து, அவர்களை வெளியில் சென்று காத்திருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. பதிவு தொடர்பற்ற சார்பதிவாளர் அலுவலகத்திற்குள்ளே வருவதற்கு வேறு எந்த காரணம் இல்லாத ஆவண எழுத்தர் / இடைத்தரகர் அலுவல் சாட்சிகள், அவரின் பெயர், முகவரி கேட்டு விசாரிக்க சார் பதிவாளர் அலுவலகத்திற்குள் வந்ததற்கான சொன்ன காரணம் அலுவல் சாட்சிகளாகிய எங்களுக்கு திருப்திகரமாக இல்லாததால், அவரை காவலர்கள் உதவியுடன் சோதனை செய்ய மகாமுனி, வயது 26/2019, த/பெ.சங்கர், கழுத்திரிக்கபட்டி, மாவத்தூர், கடவூர் தாலுகா, கரூர் மாவட்டம் என்பவரின் வலது புற பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூ. 23,500/- ம், மேல் சட்டையின் இடது புற பாக்கெட்டிலிருந்து ரூ.350/- ம் வைத்திருந்ததை பற்றி விசாரிக்க சரியான காரணம் சொல்லாததால் மேற்படி பணம் சார்பதிவகத்தில் பணிபுரிபவர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருக்கலாம் என்ற அடிப்படையில் மேற்படி பணம் ரூ. 23,850/- ஆய்வாளர் திருமதி ரேகா

அவர்களால் இந்த திடீர் சோதனையில் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து அலுவலகத்தின் அனைத்து அறைகளையும் சோதனை செய்ய சார்பதிவாளர் இருக்கைக்கு அருகே இருந்த Xerox Paper பெட்டியில் மடித்து சுருட்டப்பட்ட நிலையில் 500, 200, 100 நோட்டுக்கள் கத்தையாக சொருகப்பட்டிருந்தது. அவற்றை எடுத்து எண்ணிபார்க்க அதில் ரூ.1800/- இருந்தது, இந்த இடத்தில் கிடந்த பணத்தை பற்றி யாருக்கு சொந்தமான பணம், யார் அங்கு போட்டது என்று விபரம் கேட்க அந்த பணத்தை தன்னுடைய பணம்தான் என்று யாரும் கூற முன்வரவில்லை. அலுவலகத்திற்குள்ளே கேட்பாரற்று கிடந்த அந்த பணம் மொத்தம் ரூ.1800/- ம் ஆய்வாளர் திருமதி ரேகா அவர்களால் இந்த திடீர் சோதனையின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. கணிப்பொறி அறையில் இன்று வசூல் செய்யப்பட்ட அரசு பதிவுக்கட்டணங்களின் மொத்தம் 17 பதிவுகளையும் அதற்கு ஆன்லைனில் வசூல் செய்யப்பட்ட தொகையையும், கணிபொறியிலிருந்து 'அ' கணக்கிலிருந்து பதிவை சார்பதிவாளர் மூலமாக எடுத்து சரிபார்த்ததில் முத்திரை தீர்வை ரூ.12,500/- ம் POSல் செலுத்தப்பட்ட தொகை ரூ.6/- ம் பதிவு கட்டணம் ரூ. 54,513/- ம், கூடுதல் பதிவு கட்டணம் ரூ.693/- ம் ஆன்லையனில் பெறப்பட்டிருந்தது. உட்பிரிவு கணக்கில் ஆன்லையனில் ரூ.1,120/- ம் பெறப்பட்டிருந்தது. சார்பதிவாளர் முதற்கொண்டு அலுவலத்தில் உள்ள மற்ற அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்களில் பெண் பணியாளரை பெண் காவலர்கள் மூலமும் மற்றவர்களை ஆண் காவலர்கள் மூலமும், சோதனை செய்து பார்க்க அவர்கள் சொந்த செலவிற்காக வைத்திருந்த சொற்ப தொகைகளை தவிர வேறு பணம் ஏதும் இல்லை. ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட 31.07.2019 ஆம் தேதிக்கான 'A' கணக்கு விபரம் உட்பிரிவு கணக்கு விபரம் ஆகியவைகளை உண்மை நகலிட்டு பெறப்பட்டது. மேலும் தரகம்பட்டி சார்பதிவாளர் அலுவலக 2019 ஆம் ஆண்டு வருகை பதிவேட்டை கேட்க மேற்படி சார்பதிவாளர் திருமதி கண்ணகி ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில் 2019 ஜனவரி 1 ம் தேதி முதல் 31.07.2019 ம் தேதி வரை குறிப்புகள் காணப்பட்டது. தரகம்பட்டி சார்பதிவக அலுவலர்களின் கையிருப்பு பதிவேட்டை கேட்க மேற்படி சார்பதிவாளர் திருமதி கண்ணகி ஆஜர் செய்தார். அப்பதிவேட்டின் 10.09.2018 முதல் 31.07.2019 வரை குறிப்புகள் காணப்பட்டது. மேற்படி பதிவேடுகள் இந்த திடீர் சோதனையின் மேல் நடவடிக்கைக்காக ஆய்வாளர் திருமதி ரேகா அவர்களால் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனை இரவு 19.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இச்சோதனையின் முடிவில் தரகம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் அரசு செலுத்தவேண்டிய கட்டணத்தைத்தவிர கூடுதலாக கட்டணத்தை பெற்றும்,

அதை சார்பதிவாளர் மற்றும் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள மற்ற பணியாளர்களுக்கும் கையூட்டாக கொடுத்து காரியத்தை சாதிப்பதற்காக வைத்திருந்த பணம் என்று தெரியவந்ததன் பேரில் மேற்படி பணம் மொத்தம் ரூ.25,650/- கைப்பற்றப்பட்டது. எனவே இது குறித்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். ஒப்பம் (வேலுமணி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கரூர்).

மேற்படி புகாரை பெற்று மேற்படி புகாரின் பேரில் இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை அவர்களுக்கு மேற்படி நபர் மீது வழக்கு பதிவு செய்ய அனுமதி வேண்டி அனுப்பி வைத்த அறிக்கையை தொடர்ந்து, மேற்படி தனி நபரான மகாமுனி, வயது 26/2019, த.பெ.சங்கர், கழுத்திரிக்கப்பட்டி, மாவத்துார், கடவூர் தாலுகா, கரூர் மாவட்டம் என்பவர் மீது வழக்கு பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ள இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலுவலகத்திலிருந்து இன்று 01.08.2019 ஆம் தேதி கிடைக்கப்பெற்ற உத்தரவை தொடர்ந்து மேற்படி புகாரின் பேரில் இன்று 01.08.2019 ஆம் தேதி 14.00 மணிக்கு கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண். 04/2019, பிரிவு 102 Cr.P.C and 7 (A) of Prevention of Corruption Act (Amendment) 2018 ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் மனுவையும் மற்றும் திடீர் ஆய்வறிக்கையையும் கரூர் கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்றத்திற்கும், சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பிற்கும் வைக்கப்படுகிறது.

[signature] 01.8.19
Inspector of Police
V&AC
Karur